இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 49 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 12 – ஞாயிற்றுக்கிழமை 28 செப்டம்பர் 2025 – கோவை ★★ 16+16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 49: Thiruvalluvar Year - 2056 - Purataasi 12- Sunday 28 September 2025 - Kovai ★★ 16+16 Pages ₹5.00


### பாவேந்தர் பாரதிதாசன் விளையாட்டுத் திடல் – 'பசுமைப் பூங்கா' – பேருந்து நிறுத்தம் – மேம்பாலத்தின் கீழ் அழகுபடுத்தல் – மேம்படுத்தப்பட்ட குளம் – 'முதல்வர் படைப்பகம்'!

# சி.எம்.டி.ஏ. சார்பில் - ரூ.41.83 கோடியில் முடிவுற்ற திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, செப்.28 -**

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.41.83 கோடி செலவில் சென்னை, செனாய் நகரில் 'பாவேந்தர் பாரதிதாசன் விளையாட்டுத் திடல்', கோயம்பேடு சந்திப்பில் 'பசுமைப் பூங்கா', ராமாபுரத்தில் திறந்தவெளி பூங்கா, பம்மல், ஈஸ்வரி நகரில் விளையாட்டுத் திடல், வேளச்சேரி மேம்பாலத்தின்கீழ் அழகுபடுத்துதல் பணி, விஜயநகர் பேருந்து நிறுத்தம், முடிச்சூர், இரங்கா நகரில் மேம்படுத்தப்பட்ட குளம், தங்கசாலையில் 'முதல்வர் படைப்பகம்' என 7 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**



**அதன் விவரம் வருமாறு:-**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.9.2025) சென்னை, செனாய் நகர் 'பாவேந்தர் பாரதிதாசன் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 41.83 கோடி ரூபாய் செலவில் செனாய் நகரில் பாவேந்தர் பாரதிதாசன் விளையாட்டுத் திடல், கோயம்பேடு சந்திப்பில் பசுமை பூங்கா, ராமாபுரத்தில் திறந்தவெளி பூங்கா, பம்மல், ஈஸ்வரி நகரில் விளையாட்டுத் திடல், வேளச்சேரி மேம்பாலத்தின் கீழ் அழகுபடுத்துதல் பணி, விஜயநகர் பேருந்து நிறுத்தம், முடிச்சூர், இரங்கா நகரில் மேம்படுத்தப்பட்ட குளம், தங்கசாலையில் 'முதல்வர் படைப்பகம்' ஆகிய 7 முடிவுற்ற திட்டப் பணிகளை மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்தார்.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**

சென்னைப் பெருநகர எல்லைக் குட்பட்ட பகுதிகளில் எதிர்கால தேவைகளைக் கருதி பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், அரசின் நகர்ப்புற மேம்பாடு மற்றும் பெருநகரத் திட்டமிடல் தொடர்பான கொள்கை முடிவுகளை செயல்படுத்துதல், முழுமைத் திட்டம் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செயல்படுத்தி வருகிறது.

**திறந்து வைக்கப்பட்ட திட்டப் பணிகள்!**

சென்னை, செனாய் நகரில் 10.56 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பாவேந்தர் பாரதிதாசன் விளையாட்டுத் திடலில், பார்வையாளர்கள் மாடத்துடன் கூடிய கால்பந்து மைதானம், இரண்டு கால்பந்து பயிற்சி மைதானம், கூடைப்பந்து மைதானம், கைப்பந்து ஆடுகளம், நடைபாதை, இருக்கை வசதிகள், உடற்பயிற்சிக் கூடம், நிர்வாக அலுவலகம், வாகனங்கள் நிறுத்துமிடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை, கோயம்பேடு சந்திப்பில் 10.27 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பசுமை பூங்காவில், திறந்தவெளி அரங்கம், நிழற்கூடங்கள், எட்டு வடிவ நடைபாதை, சிறார் விளையாட்டுப் பகுதி, உடற்பயிற்சி பகுதி, யோகா தளம், சறுக்கு வளையம், நீரூற்று, நடைபாதை, இருக்கை வசதிகள், பசுமை புல்வெளிகளுடன் கூடிய அழகிய பூங்கா போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

சென்னை, ராமாபுரத்தில் 7.32 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி பூங்காவில், பசுமை நிறைந்த புல்வெளிப் பகுதிகள், சறுக்கு வளையம், திறந்தவெளி அரங்கம், யோகா தளம், தியானப் பகுதி, சிறார் விளையாட்டு பகுதி, எட்டு வடிவ நடைபாதை, நிழற்கூடங்கள், பசுமை நிறைந்த புல்வெளி போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

செங்கல்பட்டு மாவட்டம், பம்மல், ஈஸ்வரி நகரில் 4.91 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட விளையாட்டுத் திடலில், பார்வையாளர்கள் மாடத்துடன் கூடிய கால்பந்து மைதானம், உட்புற விளையாட்டு அரங்கம், பூப்பந்து மைதானம், யோகா தளம், சிறார் விளையாட்டு பகுதி, உடற்பயிற்சிக் கூடம், நடைபாதை உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.9.2025) சென்னை, செனாய் நகர் 'பாவேந்தர் பாரதிதாசன் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 41.83 கோடி ரூபாய் செலவில் முடிவுற்ற திட்டப் பணிகளை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, சிறுவர், சிறுமியர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் கே.என்.நேரு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

சென்னை, வேளச்சேரியில் 4.45 கோடி ரூபாய் செலவில் மேம்பாலத்தின்கீழ் அழகுபடுத்துதல் பணிகளும், விஜயநகர் பேருந்து நிறுத்தமும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் நீரூற்று, இறகுபந்து மைதானம், கண்கவர் சிலைகள், திறந்தவெளி உடற்பயிற்சி கூடம், நடைபாதை உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன.

செங்கல்பட்டு மாவட்டம், முடிச்சூர், இரங்கா நகர் குளம் 3.85 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு, அக்குளக்கரையில் காற்றாடி நீரூற்று, நீண்ட நடைபாதை, சிறார் விளையாட்டு பகுதி, பொதுமக்கள் கண்டுகளிக்க பார்வையாளர்கள் தளம், இயற்கை வனப்புடன் கூடிய பூங்கா அமைக்கப்பட்டுள்ளன.

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ்சி.எம்.டி.ஏ சார்பில் முதன்முதலில் கொளத்தூரில் தொடங்கப்பட்ட 'முதல்வர் படைப்பகம்' போட்டி தேர்வு மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்று, சிறப்புடன் இயங்கி வருகின்றது. சி.எம்.டி.ஏ சார்பில் 30 'முதல்வர் படைப்பகங்கள்' அறிவிக்கப்பட்டு, 28 'முதல்வர் படைப்பகங்கள்' அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, சென்னை, தங்கசாலையில் 47 இலட்சம் ரூபாய் செலவில் மாணவர்களுக்கு தேவையான வசதிகளுடன் புதுப்பித்து அமைக்கப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம்;

– என மொத்தம் 41.83 கோடி ரூபாய் செலவில் 7 முடிவுற்ற திட்டப் பணிகளை மக்கள் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், துணை மேயர் மு.மகேஷ் குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, க.கணபதி, இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. தி.சினேகா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் தெலுங்கானாவிலும் அமல்!
## முதல்வர் ரேவந்த் ரெட்டிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நன்றி!

**சென்னை, செப்.28-**

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தெலுங்கானாவிலும் அமல்படுத்தப் படும் என அறிவித்த முதலமைச்சர் ரேவந்த் ரெட்டிக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில்,

"கல்வியில் சிறந்த தமிழ்நாடு" மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்ட விழாவில் கலந்துகொண்ட தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டிக்கு நன்றி என தெரிவித்துள்ளார். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை, அடுத்த கல்வியாண்டில் இருந்து தெலுங்கானாவில் கொண்டு வர இருப்பதாக அறிவித்தமைக்காக, தெலுங்கானா முதலமைச்சருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

திராவிட மாடல் அரசின், புதுமைப் பெண், நான் முதல்வன் மற்றும் தமிழ்ப் புதல்வன் போன்ற முதன்மைத் திட்டங்களை பாராட்டுவதன் மூலம், கல்வியில் தமிழ்நாடு முன்னோடியாக, இந்தியாவிற்கு வழிவகுக்கும் என்பதை தெலுங்கானா முதலமைச்சர் உறுதிப்படுத்தி இருப்பதாகவும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

### "உடன்பிறப்பே வா"

## புதுச்சேரி மற்றும் புதுச்சேரி - காரைக்கால் மாநில தி.மு.கழக உறுப்பினர் சேர்க்கை!

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு



ஒன்றிய பா.ஜ.க. அரசின் பாசிச ஆதிக்கத்திலிருந்தும், அதற்கு துணை நிற்கும் புதுச்சேரி பா.ஜ.க. கூட்டணி அரசிடமிருந்தும் மாநிலத்தை மீட்டு, புதுச்சேரியின் 'மண் - மொழி - மானம்' காக்க, கழகத்தின் சார்பில் **"உடன்பிறப்பே வா"** பரப்புரை முன்னெடுக்கப்படும்.

புதுச்சேரியின் 30 சட்டமன்ற தொகுதிகளிலும் உள்ள அனைத்து வாக்குச் சாவடிகளிலும் வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்தித்து, பாசிச பா.ஜ.க. கூட்டணி ஆட்சியின் அவலங்களைச் சொல்லி, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் குறைந்தபட்சம் 30% வாக்காளர்களைக் கழக உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும்.

இப்பணியை ஒருங்கிணைத்துச் செயலாற்ற, கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் **எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.**, அவர்கள் தலைமைக் கழகத்தால் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**புதுச்சேரி மற்றும் புதுச்சேரி-காரைக்கால் மாநிலக் கழகத்தின் மாநில – தொகுதி – வட்ட – ஊர்க்கிளை, உட்கிளை கழகச் செயலாளர்கள் என அனைவரும் உறுப்பினர் சேர்க்கை இயக்கத்தில் முழு மூச்சோடு இணைந்து பணியாற்றி, மாநிலத்தின் 30% வாக்காளர்களைக் கழக உறுப்பினராக்கிட வேண்டும் என்ற இலக்கை அடைந்திட வேண்டும்.**

**"அண்ணா அறிவாலயம்"**
**சென்னை – 600 018.**
**நாள்: 26.09.2025.**

**துரைமுருகன்**
**பொதுச்செயலாளர்,**
**தி.மு.க.**